


## செப்டம்பர் 1
## புனித ஜால்ஸ்
## (650 - 710)

இவர் ஏதன்ஸ் நகரில் பிறந்தார். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது பக்தியையும், கல்வியறிவையும் கண்டு அதிசயித்து இவரைப் பாராட்டுவர். பாராட்டை விரும்பாமல் மறைந்த வாழ்வை நாடி வீட்டை விட்டுப் புறப்பட்டு பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றார். முதலில் ஒரு நதியின் முகத்துவாரத்திற்கருகே வாழ்ந்தார். பின்னர் இன்னொரு நதியினருகில் வசித்தார். கடைசியாக தம் மறைமாவட்டத்தில் தனி வாழ்வு நடத்தி அனேக ஆண்டுகளாக கடவுளுடன் பேசுவதிலேயே நேரத்தை செலவழித்தார். புதுமைகள் செய்யும் வரத்தை கடவுள் இவருக்கு அருளினார். இவரது பெரும் கீர்த்தி பிரான்ஸ் நாட்டில் எங்கும் பரவியது. அந்நாட்டின் மன்னர் இவரை மிகவும் மதித்தார். காட்டை விட்டு விட்டு நாட்டுக்கு வரும்படி மன்னர் இவரை அழைத்தார். இவர் இணங்கவில்லை. சீடர்கள் இவரிடம் வந்தார்கள். அவர்களுக்காக ஒரு மடத்தைக் கட்டி அதற்கேற்ற சட்டதிட்டங்களை ஏற்படுத்தினார்.

**சிந்தனை:** தனிமையும் மவுனமும் குற்றங்குறைகளை விலக்க சிறந்த வழிகளாகும்.

**செபம்:** ஆண்டவரே, தனிமையையும் மௌனத்தையும் நேசிக்கும் வரத்தை எங்களுக்குத் தாரும்.